**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**STC . No. 509/2024**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்பிரமணியம் |
| Father's / Husband Name | : | த/பெ.ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

1) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்று எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரி. எதிரியை எனக்கு எப்படி தெரியும், எத்தனை வருடங்களாக தெரியும் என்று எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர் எனது நண்பர் என்று குறிப்பிட்டுள்ளேன். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரி. எதிரி எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்டார் என்று எனது மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரி.

2) எதிரி ரூ.1,50,000/– கடனாக கேட்டார். ஒரே தவணையாக மேற்படி தொகையை எதிரிக்கு கடன் கொடுத்தேன். எனக்கு IDBI வங்கியில் கணக்கு உள்ளது. எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் நான் தொழில் செய்து வருவதால் சில மாதம் ரூ.50 ஆயிரமும், சில மாதம் ரூ. 1 லட்சமும் கிடைக்கும். எனது வரவு செலவுகள் அனைத்தும் வங்கி மூலமாக மட்டுமே செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் போது எனது வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்று இந்த வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரி. எதிரி கடனை மூன்று மாதத்ஙகளுக்குள் திருப்பி தருவதாக என்னிடம் சொன்னார். அதனை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் போது அவரிடம் ஆவணம் ஏதேனும்

பெற்றேனா என்றால் இல்லை. இவ்வாறு எந்த ஆவணமும் பெறாமல் எதிரிக்கு நான் ரூ.1,50,000/- கடன் கொடுத்ததாக சொல்வது நம்பும் படியாக இல்லை என்றால் அவர் எனது நண்பர் என்பதற்காக பணம் கொடுத்தேன். மேற்படி தொகையை நான் வங்கியில் இருந்து எடுத்து கொடுக்கவில்லை, என்னிடம் இருந்ததை கொடுத்தேன். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பணமாக யாருக்கும் கொடுக்ககூடாது, காசோலை, வரைவோலை போன்ற ஆவணங்கள் வாயிலாகவோ, வங்கி வாயிலாகவோ தான் தரவேண்டும் என்றால் சரி, ஆனால் எதிரி எனது நண்பர் என்பதற்காக பணமாக கொடுத்தேன்.

3) நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எதிரிக்கு நான் ரூ.1,50,000/- கடன் கொடுத்ததாக சொல்வதை எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை, கைமாற்று கடனாக கொடுத்ததால் அவ்வாறு காட்டவில்லை. நான் அவ்வாறு உண்மையிலேயே எதிரிக்கு ரூ.1,50,000/- கடன் கொடுத்திருந்தால் அதனை நான் எனது வருமான வரி கணக்கில் காண்பிதிருப்பேன் என்றும், அவ்வாறு கடன் கொடுக்கவில்லை என்பதால் தான் அதனை நான் எனது வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றால் சரியல்ல.

4) நாமக்கல் துறையூர் ரோட்டில் இயங்கி வரும் கணேஷ் பைான்ஸ் நிறுவனத்தில் நான் கூட்டாளி என்றால் சரியல்ல. மேற்படி பைான்ஸ் நிறுவனத்தில் எதிரியின் தாயார் மகேஷ்வரி ஏலச்சீட்டு உறுப்பினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எதிரியின் தாயார் மேற்படி நிறுவனத்தில் பணம் பெறும் போது அதற்கு பொறுப்புறுதியாக எதிரி கையொப்பம் மட்டும் இட்டும் ஒரு வெற்று காசோலையை மேற்படி பைான்ஸ் நிறுவனத்திற்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியின் தாயார் மேற்படி நிறுவனத்தில் பணம்முழுவதையும் திருப்பி செலுத்திவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எதிரியால் கொடுக்கப்பட்ட வெற்று காசோலையை பயன்படுத்தி இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும், எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதுமான வசதி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது வருமானத்தை நிரூபணம் செய்யும் வகையில் நான் இந்த வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எதிரி என்னிடம் பணம் பெற்று ஏமாற்றி விட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே எதிரி என்னிடம் பணம் பெற்று ஏமாற்றியிருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு யார் என்றே தெரியாது என்றும், அவருக்கு நான் கடன் எதுவும்

கொடுக்கவில்லை என்றும், மேற்படி பொறுப்புறுதியாக கொடுக்கப்பட்ட காசோலையை தவறுதலாக பயன்படுத்தி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.